இல்லாத காரணத்திஞல் இந்த முயற்சியை அரசு இனியாவது எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அம்மூர் பேரூராட்சியில் அது சார்ந்துள்ள வாலாஜா ஒன்றியத்தில் லாலாப் பேட்டையில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அம்மூர் பேரூராட்சியே முன்வந்து வேறு டிஸ்பென்சரி நடத்தலாம். அப்படி முன்வந்து உதவித்தொகை கேட்டால் அரசாங்கம் பரிசீலிக்கும். அம்மூரைப்போல் எத்தனையோ அம்மூர்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. எனவே ஒரேயொரு அம்மூரைப்பற்றித் தனியாகக் கவலைப்பட அரசால் இயலவில்லை.

* 124 வினு.—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், சங்கராபுரம் பிரதம சுகாதார நிலையத்தை அரசினர் மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(அ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு கொண்டு வரப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ந. தருமலிங்கம் : தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி வட்டம் சங்கராபுரம் ஒரு சென்டரான இடமாக இருப்பதால் அதைச் சுற்றிலும் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. இப்பொழுது அமைச்சரவர்கள் சொன்னுர்கள், அங்கு பிரதம சுகாதார நிலையத் திற்குப் பதில் அரசாங்க மருத்துவமனை திறக்கும் திட்டம் இல்லை என்று சொன்னுர்கள். ஆனுல் அங்குள்ள கிராம மக்கள் எந்த அளவிற்குக் கஷ்டப்படுகிருர்கள் என்பதை நான் அதிகம் எடுத்துச் சொல்வதற்கில்லை. ஏனென்ருல் மீண்டும் இந்த விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து அந்த சென்டருக்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதிலே ஏற்பட்ட கருத்து வேற்றுமை கேள்வி கேட்ட முறையில் தோன்றிய தாகும். கேள்வியில் சங்கராபுரம் பிரதம சுகாதார நிலையம் என்று

இருக்கிறது. சங்கராபுரத்தில் பிரதம சுகாதார நிலையம் இப்பொழுது இல்லை. அதுதான் பதிலில் தெரிவிக்கப்பட்டது. ஆனல் சங்கராபுரம் பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரி இருக்கிறது. அதை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் ஆணையிட்டு இருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மீனவர்கள்

* 125 வின.—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில், நாட்டுப் படகு வைத்து மீன் பிடிப்பவர்களுக்கும், விசைப்படகு மூலம் மீன் பிடிப்பவர்களுக்குமிடையில் தகராறு ஏற்பட்டு, விசைப்படகினர் நாட்டுப் படகினர் போடும் வலைகளைச் சேதப்படுத்துவதும், நாட்டுப் படகினர் இதனல் பாதிக்கப்படுவதுமாக இருப்பதைத் தவிர்க்கவென எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இராமநாதபுரம் மாவட்ட நாட்டுப் படகு மீனவ சங்கத் தலைவரையும் அவர்களைச் சேர்ந்த சிலரையும் மீன்துறை உதவி இயக்குநர், சிவகங்கை, அவர்கள் நேரில் பேசி நாட்டுப் படகுக்காரர்களும், விசைப்படகுக்காரர்களும் மீன் பிடிப்பது சம்பந்தமாக மீன்துறை இயக்குநரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் கலந்து பேசி ஒரு முடிவு எடுக்கும் வரை அமைதியாக இருக்கும்படியும் எவ்வித வன்முறையில் இறங்க வேண்டாமென்றும் கேட்டுக்கொண்டதன்பேரில் அவர்களும் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

திரு. வீ. மலைக்கண்ணன் : தலைவரவர்களே, நாட்டுப்படகுகளின் மூலம் மீன் பிடிப்பவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக அந்தத் தொழிலை நடத்துகிருர்கள். விசைப்படகுகளில் மீன் பிடிப்பவர்கள் அதை வாணிபமாக, அதாவது லாப நோக்கத்தோடு செய்கிருர்கள். எனவே, வாழ்க்கைக்காகத் தொழில் செய்யும் அந்த மக்களுக்கு அடிக்கடி இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படுகின்றன. எனவே, அதை வரையறுத்து விசைப்படகு வைத்திருப்பவர்கள் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் சென்றுதான் மீன் பிடிக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.